**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்**
**2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் நாள் வியாழக்கிழமை**
**இ.ம.எண்.01/2019**
**அ.வ.எண்.221/2014**

கணேசன் ...மனுதாரர்/வாதி

/எதிராக/

மாதப்பன் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 21.10.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V. வைத்திலிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சித்தன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 16 மற்றும் 17 பிரிவு 151 ன் கீழ் வழக்கினை திருத்த அனுமதி வழங்க கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>1) மனுவின் சுருக்கம்</u> : -

அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் ஆணையாளர் நியமனம் கோரி இ.ம.எண்.1056/2014 தாக்கல் செய்து அதன்படி ஆணையாளர் தாவாசொத்தை பார்வையிட்டு அளந்து அறிக்கையும், சர்வேயர் வரைபடமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். ஆணையாளர் தன்னுடைய அறிக்கையில் தாவாசொத்து விபரத்தில் கண்டுள்ள சர்வேஎண்.31/2 ல் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார். அந்த நிலத்தின் ஒரு பகுதியில் பிரதிவாதியின் வீட்டின் ஒரு பகுதி அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். மனுதாரர்/வாதி தாவாவை தாக்கல் செய்யும்போது எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்திருந்தார். தற்போது அசல் வழக்கு சிறப்பு விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்/வாதி தரப்பில் முதல் விசாரணைக்கு தயாராகும்போது வழக்குகோப்பை படித்து பார்த்துவிட்டு மேற்படி தாவாசொத்து

விபரத்தில் கண்டுள்ள சர்வேஎண்.31/2 ல் பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள 8.85 செண்ட் நிலத்தை பொறுத்து உரிமை விளம்பல் பரிகாரமும் மற்றும் சுவாதீன பரிகாரமும் மற்றும் ஆக்கிரமிப்பு பகுதியில் அமைந்துள்ள பிரதிவாதியின் வீட்டின் ஒரு பகுதியை இடித்து காலிநிலமாக ஒப்படைக்க வேண்டும் என்பதற்காக செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் வழக்கில் கோரினால் சாலசிறந்ததாக இருக்கும் என்று வழக்கறிஞர் அறிவுரை வழங்கினார். எனவே மேற்படி அசல் வழக்கை பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதியை பொறுத்து உரிமை விளம்பல் பரிகாரமும் மற்றும் சுவாதீன பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கேட்க வேண்டும் என்ற விபரம் தற்போதுதான் மனுதாரருக்கு தெரிய வந்தது. எனவே தாவாவில் மனுவின் திருத்தப்பாடு விவரத்தில் கண்டுள்ளவாறு தாவாவை திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. வழக்கு தாக்கல் செய்து 5 வருடங்களுக்கு பிறகு வழக்கு சிறப்பு விசாரணைக்கு போடப்பட்டுள்ள நிலையில் தற்போது இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் வாதி தரப்பில் ஆணையாளர் பார்வையிட்டு அளவீடு செய்யும்போது வழக்கின் பிரதிவாதியின் சர்வேஎண்.88/4 மூன்று உட்பிரிவுகளாக பிரிந்திருப்பதாகவும், அதில் 2 உட்பிரிவுகள் வழக்கில் இல்லாதவர்கள் பெயரில் இருப்பதாகவும், கிராம நிர்வாக அலுவலர் தெரிவித்ததாக கூறி மனுசொத்தை அளவிட முடியவில்லை என்று கூறி 18.01.2017 ம் தேதி நீதிமன்றத்தில் மெமோ தாக்கல் செய்திருந்தார். இந்நிலையில் வாதி தரப்பில் சர்வேஎண் திருத்தப்பாடு கோரி மனுசெய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டு ஆணையாளர் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி சர்வேஎண் திருத்தப்பாடு கோரி தாக்கல் செய்த மனுவில் இந்த திருத்தப்பாடுகள் மற்றும் சங்கதிகள் பற்றி எதுவும் சொல்லாமல் தற்போது மேற்படி வழக்கிற்கு சம்மந்தமில்லாத பரிகாரங்கள் கோரி மனுதாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி வாதிக்கு எதிராக அ.வ.எண்.242/2014 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி 2 வழக்குகளும் ஒன்றாக சேர்த்து விசாரிக்க கோரி மெமோ தாக்கல் செய்து அதுவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/பிரதிவாதி கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில்

சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர் தரப்பில் நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் ஆணையாளர் நியமனம் கோரி இ.ம.எண்.1056/2014 தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதன் பேரில் ஆணையாளர் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும், ஆணையாளர் தன்னுடைய அறிக்கையில் தாவாசொத்து விபரத்தில் கண்டுள்ள சர்வேஎண்.31/2 ல் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் எனவும், அந்த நிலத்தின் ஒரு பகுதியில் பிரதிவாதியின் வீட்டின் ஒரு பகுதி அமைந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார் எனவும், தற்போது அசல் வழக்கு சிறப்பு விசாரணைக்காக போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்/வாதி தரப்பில் முதல் விசாரணைக்கு தயாராகும்போது வழக்குகோப்பை படித்து பார்த்துவிட்டு மேற்படி தாவாசொத்து விபரத்தில் கண்டுள்ள சர்வேஎண்.31/2 ல் பிரதிவாதியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள 8.85 செண்ட் நிலத்தை பொறுத்து உரிமை விளம்பல் பரிகாரமும் மற்றும் சுவாதீன பரிகாரமும் மற்றும் ஆக்கிரமிப்பு பகுதியில் அமைந்துள்ள பிரதிவாதியின் வீட்டின் ஒரு பகுதியை இடித்து காலிநிலமாக ஒப்படைக்க வேண்டும் என்பதற்காக செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோர வேண்டும் என வழக்கறிஞர் கூறினார் எனவும், ஆகவே தாவாவை திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர்/வாதி மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கு தாக்கல் செய்து 5 வருடங்களுக்கு பிறகு வழக்கு சிறப்பு விசாரணைக்கு போடப்பட்டுள்ள நிலையில் தற்போது மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் எனவும், ஆணையாளர் பார்வையிட்டு அளவீடு செய்யும்போது வழக்கின் பிரதிவாதியின் சர்வேஎண்.88/4 மூன்று உட்பிரிவுகளாக பிரிந்திருப்பதாகவும், அதில் 2 உட்பிரிவுகள் வழக்கில் இல்லாதவர்கள் பெயரில் இருப்பதாகவும், கிராம நிர்வாக அலுவலர் தெரிவித்ததாக கூறி மனுசொத்தை அளவிட முடியவில்லை என்று கூறி 18.01.2017 ம் தேதி நீதிமன்றத்தில் மெமோ தாக்கல் செய்திருந்தார் எனவும், இந்நிலையில் வாதி தரப்பில் சர்வேஎண் திருத்தப்பாடு கோரி மனுசெய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டு

ஆணையாளர் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும், மேற்படி சர்வேஎண் திருத்தப்பாடு கோரி தாக்கல் செய்த மனுவில் இந்த திருத்தப்பாடுகள் மற்றும் சங்கதிகள் பற்றி எதுவும் சொல்லாமல் தற்போது மேற்படி வழக்கிற்கு சம்மந்தமில்லாத பரிகாரங்கள் கோரி மனுதாக்கல் செய்துள்ளார் எனவும், ஆகவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/பிரதிவாதி கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) மனுவினை பரிசீலனை செய்ததில் நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையிலிருந்து சர்வேஎண்.31/2 ல் 8.85 செண்டினை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளது தெரிய வந்ததாகவும், ஆகவே உரிமை விளம்பல் பரிகாரமும் மற்றும் சுவாதீன பரிகாரமும் மற்றும் ஆக்கிரமிப்பு பகுதியில் அமைந்துள்ள பிரதிவாதியின் வீட்டின் ஒரு பகுதியை இடித்து காலிநிலமாக ஒப்படைக்க வேண்டும் என்பதற்காக செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்களும் அதற்கான வழக்கு மதிப்பீடு மற்றும் ஆக்கிரமிக்கப்பட்டதாக கூறும் சொத்தினை பி அட்டவணையாக வழக்கில் சேர்க்கவும் அனுமதி கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iv) வழக்கு ஆவணங்களிலிருந்து இவ்வழக்கில் விசாரணை ஆரம்பிக்காத நிலையில் உள்ளது தெரியவருகிறது. எனவே வழக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பே திருத்தல் மனுவினை தாக்கல் செய்துள்ளதால் அதனை இலகுவாக அணுகலாம் என்பதால் மேற்படி திருத்தத்தை வழக்கில் சேர்க்க மனுதாரருக்கு ஓர் வாய்ப்பு வழங்குவது நீதிக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் மேற்படி திருத்தமானது அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரர் எதிர்மனுதாரர் மீது திருத்தல் மனுவில் கூறியுள்ள பரிகாரங்கள் குறித்து புதிய வழக்கினை தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். எனவே மேற்படி திருத்தமானது புதிய வழக்கு ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் உள்ளதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் நிதிமன்ற ஆணையாளர் நீ.ம.சா.ஆ.1 அறிக்கை, நீ.ம.சா.ஆ.2 வரைபடம் ஆகியவற்றை கடந்த 09.12.2015 லேயே தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் மேற்படி அறிக்கை தாக்கல் செய்ததிலிருந்து 4 வருடங்கள் கழித்து மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருவதால் மனுதாரால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகை அளிக்கும் பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/-செலவுத்தொகையாக 07.11.2019 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க 08.11.2019.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/-**திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**

மனுதாரர் தரப்பு சாட்சிகள் :- இல்லை

நீதிமன்ற சான்றாவணங்கள் :-

| | | | |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 09.12.2015 | நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை | அசல் |
| நீ.ம.சா.ஆ.2 | 09.12.2015 | நீதிமன்ற ஆணையாளரின் வரைபடம் | அசல் |

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை

ஒப்பம்/-**திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**